பக்கங்கள் 16+4

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 21 திங்கட்கிழமை 05.01.2026 | அதிர்வு 159

## முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் கைது!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முக்கியஸ்தரான முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# எதிரணிகளின் ஐக்கியமே நாட்டுக்கு இன்று முக்கியம்

## நாமல் ராஜபக்ஷ வலியுறுத்துகின்றார்
## சஜித் - ரணில் இணைவுக்கு வரவேற்பு

நாட்டின் தலைவிதியை மாற்றுவதற்கு கூட்டு எதிர்க்கட்சி கூட்டணி மட்டுமே ஒரே சாத்தியமான வழி என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

“பிரிந்து நின்று நாட்டைப் பலவீனப்படுத்துவதை விட அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்று எனது தந்தை எப்போதும் நம்பினார். எனவே, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி 04

### தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம்:

# அழைப்பாணை வழங்கப்பட்டவர்களை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி

### பெப்ரவரி 26ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

தையிட்டி சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராடியமைக்காக வேலன் சுவாமிகள் மற்றும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் உள்ளிட்ட ஐவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு மற்றும் இன்று பொலிஸார் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்ததன் மூலம் தொடுக்கப்பட்ட வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை சொந்தப் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் 02



# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**அழைப்பாணை...**

அனுமதி வழங்கியதுடன் எதிர்வரும் பெப்ரவரி 26ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக அமைதி வழியில் போராடிய நிலையில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் வேலன் சுவாமிகள், காணி உரிமையாளர் சாருஜன் உள்ளிட்ட ஐவர் கடந்த 21ஆம் திகதி கைது செய்யப்பட்டு பின்னர் நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் விடுவிக்கப்படுகையில் எதிர்வரும் ஜனவரி 26ஆம் திகதி வழக்குத் தவணையிடப்பட்டது. எனினும் ஏற்கனவே கைதான ஐவரையும் இன்று மன்றில் முன்னிலையாகுமாறு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டது.

அதற்கு மேலதிகமாக குற்றப்பத்திரம் தாக்கள் செய்யப்பட்டு ஏலவே கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்ட வேலன் சுவாமிகள், தவிசாளர் நிரோஷ் உள்ளிட்ட ஐவரையும் உள்ளடக்கி மேலதிகமாக வலிகாமம் வடக்கு தவிசாளர் சோ. சுகிர்தன், போராட்டத்தில் பங்குகொண்ட பிரதேச சபை உறுப்பினர்கள், போராட்டத்தில் பங்கெடுக்கும் செயற்பாட்டாளர்கள் எனப் பலரையும் உள்ளடக்கிக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதுடன் ஏற்கனவே தையிட்டி தொடர்பான வழக்குகளும் இன்று எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த வழக்குகளில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி நல்லதம்பி சிறிகாந்தா, சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் தலைமையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பாக 13 சட்டத்தரணிகள் கொண்ட குழாம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகினர்.

இவ்வழக்குகளில் பொலிஸ் தரப்பினர், நீதிமன்றக் கட்டளையைப் போராட்டக்காரர்கள் மீறினர் என்றும், இனநல்லிணக்கத்துக்குப் பங்கம் ஏற்படுத்தினர் என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதனைக் கடுமையாக ஆட்சேபித்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், அமைதியான வழியில் இடம்பெற்ற போராட்டத்தை அடக்கி இருக்கக் கூடாது எனவும், பொலிஸாரே சட்டத்தை மீறியுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

ஏற்கனவே 1993ஆம் ஆண்டு இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் முன்வைக்கப்பட்ட வழக்குகளில் போராடுவதற்கு உள்ள உரிமை உறுதிப்படுத்தப்பட்ட வழக்குகளை முன்வைத்து அவர் வாதிட்டதுடன் இவ்வாறானதோர் வழக்கைத் தாக்கல் செய்வதற்குப் பொலிஸாருக்கு உரிமையில்லை என்றும், வலிகாமம் வடக்கு பிரதேச சபை தனது சட்ட ரீதியிலான அதிகாரத்தைப் பிரயோகிக்கும்போது அதனைத் தடுக்கும் வகையில் சட்டவிரோத கடிதம் ஒன்றை பொலிஸார் அனுப்பியுள்ளனர் என்றும், மேலும் பொலிஸாரே அங்கு வன்முறையைத் தூண்டும் வகையில் தேடித் தேடி கைதுகளை மேற்கொண்டனர் என்றும் வாதிட்டார்.

பொலிஸாரின் கைதுகளின்போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தாக்கப்பட்டமை தொடர்பான மருத்துவ அறிக்கையையும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், மன்றில் காண்பித்து வாதங்களை முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து வாதங்களை முன்வைத்த சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன், இங்கு குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை 106இன் கீழ் தொல்லைகள் பற்றிய அவசர விடயங்களில் தற்காலிக கட்டளைகள் 14 நாட்களுக்கு அதிகமாக வலுவுடையதாக இருத்தல் ஆகாது என மேலும் சட்டத் தீர்ப்புக்களை முன்வைத்து இந்த வழக்கை முடிவுறுத்துமாறு கோரி வாதிட்டார்.

சிரேஷ்ட சட்டத்தரணி நல்லதம்பி சிறிகாந்தா, பொதுத்தொல்லைகள் மீதே இவ்வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கைப் பொலிஸார் இவ்வாறாகத் தாக்கல் செய்திருக்க முடியாது எனவும், பொலிஸாரே அமைதிக்குப் பங்கம் விளைவித்தனர் எனவும், இது சாதாரணமாகப் பொலிஸார் மேலிட உத்தரவின் பிரகாரமே மேற்கொண்ட நடவடிக்கை எனவும், சாதாரணமாக இடம்பெறுகின்ற பொதுத் தொல்லைகள் தொடர்பாக பிரயோகிக்கப்படக்கூடிய சட்டம் ஒன்றை மக்களின் ஜனநாயக உரிமைகளில் பங்கம் ஏற்படுத்துவதற்காகப் பிரயோகிக்க முடியாது எனவும் சட்ட ரீதியிலான பொலிஸாரின் தவறுகளை முன்னிறுத்தி வாதிட்டார்.

பின்னரான நிலைமைகளில் தொடர்ச்சியாக இவ்விடயம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன.

அவ்வழக்குகளிலும் பொலிஸார் மன்றில் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை சட்டத்தரணிகள் நிராகரித்தனர்.

இந்நிலையில் இருதரப்பு வாதங்களையும் கருத்தில்கொண்ட நீதிவான் சந்தேகநபர்களைச் சொந்தப் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

அத்துடன் இந்த வழக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்தார்.













# குடும்பப் பெண் குத்திக் கொலை!



## பிள்ளைகள் முன்னிலையில் கொடூரம் வட்டிப் பண முரண்பாட்டால் நேர்ந்த கதி

குடும்பப் பெண் ஒருவர், தன் பிள்ளைகளின் கண் முன்னால் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் அனுராதபுரம், கெக்கிராவை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தாயாரான 46 வயது பெண்ணே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மேற்படி பெண்ணின் கணவர் நேற்று கூலி வேலைக்குச் சென்றிருந்தார். அந்தப் பெண் வீட்டில் தனது பிள்ளைகளுடன் இருந்துள்ளார்.

மாலை 5 மணியளவில் கத்தியுடன் வீட்டுக்கு வந்த உறவினரான ஆண் ஒருவர், வட்டிப் பணம் தொடர்பில் அந்தப் பெண்ணுடன் முரண்பட்டுள்ளார். இறுதியில் அவர் தான் கொண்டு வந்திருந்த கத்தியால் அந்தப் பெண்ணின் நெஞ்சில் குத்திவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

உயிருக்குப் போராடிய அந்தப் பெண்ணை அயலவர்கள் உடனே வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். எனினும், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிறிது நேரத்தில் பெண் உயிரிழந்து விட்டார்.

கொலையாளியான 42 வயது நபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னடுத்துள்ள பொலிஸார், சம்பவம் தொடர்பில் பெண்ணின் கணவரிடமும், பிள்ளைகளிடமும் வாக்குமூலங்களைப் பெற்று மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெடுக்குநாறிமலை ஆலயத்துக்கான நிலத்தை விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுங்கள்!

## வடக்கு ஆளுநருக்கு சத்தியலிங்கம் எம்.பி. கடிதம்



**(கி.வசந்தன்)**

வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்துக்கான நிலம் மற்றும் பாதையை விடுவித்துத் தருமாறு வடக்கு மாகாண ஆளுனர் நா.வேதநாயகனுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இன்றைய திகதி குறிப்பிடப்பட்டு அக்கடிதம் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வரலாற்று தொன்மைமிக்க வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் வழிபாட்டு செயற்பாடுகளுக்காக ஆலயம் அமைந்துள்ள பகுதியின் ஒரு ஏக்கர் காணியினை ஆலயத்துக்கு விடுவித்துத் தர ஆவன செய்யுமாறு ஆலய அறங்காவலர் சபையினர் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான கோரிக்கையை ஏற்கனவே தங்களுக்குத் தாம் விடுத்துள்ளனர் எனவும், எனினும் எதுவித திருப்திகரமான பதிலும் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த ஆலயத்துக்குச் செல்லும் பாதையை வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு விடுவித்துத் தரும் பட்சத்தில் அந்தப் பாதையைத் தம்மால் புனரமைக்க முடியும் என வவுனியா வடக்கு பிரதேச சபையினரும் தெரிவித்துள்ளனர்.

எனவே, தாங்கள் இந்த விடயத்தில் நேரடியாகத் தலையீடு செய்து குறித்த வரலாற்றுத் தொன்மைமிக்க ஆலயத்துக்கான காணி மற்றும் பாதையை மிக விரைவில் விடுவித்துத் தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்." – என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர், வெடுக்குநாறிமலை ஆலய அறங்காவலர் சபையினருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.




# தையிட்டி விகாரைக்கு எதிராக லண்டனில் பெரும் போராட்டம்

யாழ். தையிட்டியில் மக்களின் காணிகளைச் சுவீகரித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராகவும், மக்களின் காணிகளை முழுமையாக விடுவிக்கக் கோரியும் புலம்பெயர் தமிழர்களின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் லண்டனில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.








## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**எதிரணிகளின்...**

ஒன்றிணைவதற்கான முயற்சிகளை நாங்கள் வரவேற்கின்றோம். இரு கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். இருப்பினும், நான் அந்த கட்சிகள் எதிலும் உறுப்பினன் அல்லன் என்பதால், இது நடக்குமா என்று என்னால் சொல்ல முடியாது." – என்றும் அவர் கூறினார்.

தேசிய நலனுக்காக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்றுதான் உறுதியாக நம்புகின்றார் என்றும் நாமல் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறியும் எதிர்க்கட்சிகளின் ஐக்கியத்துக்கு அழைப்பு விடுத்தார். அத்தகைய ஒத்துழைப்புத்தான் தேசத்துக்குச் சிறந்த எதிர்காலத்தை உறுதி செய்வதற்கான ஒரே வழி என்றும் அவர் மேலும் கூறினார்.

---

**முன்னாள் அமைச்சர்...**

பெர்னாண்டோ இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அரச வளங்களை முறைகேடாக பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே நிதி குற்ற விசாரணைப் பிரிவினரால் அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வாக்குமூலம் வழங்குவதற்காக இன்று எப்.சி.ஐ.டிக்கு ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வரவழைக்கப்பட்டிருந்தார்.

வாக்குமூலம் பெறப்பட்டதன் பின்னரே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சதொசவுக்கு லொறி உள்ளிட்ட வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் ஜொஹான் பெர்னாண்டோவும் கைது செய்யப்பட்டுள்ளார்.

எப்.சி.ஐ.டியினரால் கடந்த 30 ஆம் திகதி கைது செய்யப்பட்ட அவர், ஜனவரி 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, இன்று வாக்குமூலம் வழங்கச் செல்வதற்கு முன்னர், தனக்கு எதிராக அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை இடம்பெறுகின்றது என ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ குற்றஞ்சாட்டியிருந்தார்.

அச்சுறுத்தல்களுக்குத் தான் அடிபணியப் போவதில்லை எனவும், சட்ட ரீதியாக சவால்களை எதிர்கொள்வேன் எனவும் அவர் அறிவித்திருந்தார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தணிந்துள்ள முறுகல்!

இலங்கையின் கல்வி முறையில் நீண்டகாலமாக நிலவி வரும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, மாணவர்களின் நடைமுறைத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் ஐந்து முக்கிய துறைகளின் கீழ் பாரிய கல்வி மறுசீரமைப்புகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளதாக கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய பாடத்திட்டங்கள் 2026ஆம் கல்வியாண்டில் அதிகாரபூர்வமாக நடைமுறைக்கு வருகின்றன என அரசு அறிவித்துள்ளது. அதன்படி, தரம் 6 மாணவர்களுக்கு ஜனவரி 21 ஆம் திகதியிலிருந்தும், தரம் 1 மாணவர்களுக்கு ஜனவரி 29 ஆம் திகதியிலிருந்தும் புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளளது.

அரசு நடைமுறைக்கு கொண்டு வரத் திட்டமிட்டுள்ள கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகளை ஒரு தலைப்பட்சமான நடவடிக்கைகள் எனத் தெரிவித்து, அவற்றை கல்வித் தொழிற்சங்க அமைப்புக்கள் கடுமையாக எதிர்த்து வரும் பின்னணியில், அந்த நடவடிக்கைகளை முழு அளவில் நடைமுறைப்படுத்தும் தன்னுடைய எதிர்பார்ப்பை அரசு வெளியிட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளில் பிரதான பங்குதாரர்களான தொழிற்சங்கங்களை கலந்தாலோசிக்காமலும் அவற்றினுடைய கருத்தை உள்வாங்காமலும் ஒருதலைப் பட்சமாக கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுப்பதாக தெரிவிக்கும் தொழிற்சங்கங்கள், அந்த வகையிக் இந்த எதேச்சாதிகாரத் திட்டங்கள்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் அவற்றை முழு அளவில் எதிர்ப்போம் என்று முழங்கியிருக்கின்றன.

கல்விச் சீர்திருத்தத்தின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றான பாடசாலை நேர மாற்றத்தை - நேர அதிகரிப்பை - அரசாங்கம் கொண்டுவர முயன்றது. தினசரி கல்வி பாடவிதான நேரத்தை 45 நிமிஷத்தினால் அதிகரிக்க அரசு எடுத்த முடிவை தொழிற்சங்கங்கள் ஒற்றைக் காலில் நின்று அடியோடு எதிர்க்கின்றன.

புத்தாண்டில் நேர மாற்றம் உட்பட அந்தச் சீர்திருத்தங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என அரசு ஒற்றைக் காலில் நின்ற போதிலும் அதை முழு அளவில் எதிர்ப்போம் என தொழிற்சங்கங்கள் பிரகடனப்படுத்தி எதிர்க்கத் தயாராக் நின்ற சமயத்தில் அந்த முயற்சி இப்போதைக்கு கைவிடப்பட்டிருக்கின்றது.

பேரிடர் தாக்கிய பின்னடைவு நிலையில் அந்த நேர அறிமுகப்படுத்தலை இப்போதைக்குத் தள்ளிப் போட்டிருப்பதாகக் கூறி அரசு நேரடி சவாலில் இருந்து சற்றுப் பின்வாங்கி இருக்கின்றது. அதனால் கல்விச் சீர்திருத்தம் தொடர்பான நேரடி மோதல் நிலைமை சற்றுத் சற்று தள்ளிப் போய்த் தணிந்துள்ளது.

கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக அரசு தலைமைக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான நேரடி மோதல், மேற்படி கல்விச்செயற்பாட்டு - அல்லது பாட விதான - நேர அதிகரிப்பு விவகாரம் தற்காலிகமாக தள்ளிப் போடப்பட்ட காரணத்தினால், முறுகல் நிலையும் தணிந்து சற்றுத் தள்ளிப் போயிருப்பதாகத் தெரிகிறது.

எதிர்ப்பும் போராட்டமும் சற்று தள்ளி போடப்பட்டிருக்கின்றனவே தவிர, விவகாரம் - பிணக்கு - முடிவுக்கு வந்ததாக இல்லை என்பதுதான் உண்மையான நிலைமையாகும். போராட்டக் களச் சூழல் நீறு பூத்த நெருப்பாகவே தொடர்கின்றது.



# வட புலத்தில் வன்னிப்பெருநிலம்!



நாகராசா தனுஸ்காந்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

இலங்கையின் வடபுலத்தில் முக்கிய வரலாற்று தொன்மைமிகு இடமாக வன்னிப் பெருநிலம் காணப்படுகின்றது. வன்னிப் பெருநிலமானது இயற்கை மரபுரிமைகளைச் செறிவாகக் கொண்ட ஒரு பிராந்தியமாகும். நீர் நிலம் சார்ந்த மிகப் பரந்த இயற்கை அமைப்புகளையும் அது சார்ந்த உயிரியல் சூழலையும் பண்பாட்டு நிலவுருக்களையும் உடைய வன்னி, காலப்போக்கில் பல்வேறு கருத்தியல் மற்றும் பௌதிகரீதியான கட்டமைப்பால் பேரினவாத கொள்கைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட இடமாகவும் காணப்படுகின்றது.

இது வடக்குக் கிழக்கு பூராகவும் இருக்கும் ஒரே பிரச்சினையாகவே காணக்கூடியதாக இருக்கிறது. தொல்லியல், வன ஜீவராசிகள் திணைக்களம் என்று படையணி நீண்டு கொண்டே செல்கிறது.

இது ஒரு பக்கம் இருக்க, வன்னிப் பெருநிலமானது ஆறுகளும், கடல்களும், குளங்களும், நீரினைகளும், வாய்க்கால்களும், ஓடைகளும், நீரேரிகளும் அதனை ஈழத்தமிழ் நிலத்தின் சொர்க்க புரியாக இன்றும் மிளிரச் செய்கின்றன.

இதனாலேயே இயற்கைப் பெயர் கொண்டு பல ஊர்கள் காணப்படுகின்றது. கனக ராயன்குளம், மருதங்குளம், ராசேந்திரன் குளம், புளியங்குளம், மூன்று முறிப்பு உடையார்கட்டு முதலியவை இதற்கான எடுத்துக்காட்டுகளாக அமைகிறது. அத்தோடு இக்கிராமங்கள் குளம், வயல்கள், பெரும் மரச் செறிவுகள் தெய்வங்கள் குடியிருப்புகளை பிரதான உறுப்புக்களாகக் கொண்ட ஒரு பண்பாட்டுக் கட்டமைப்பாக காணப்படுகின்றது. ஆதிக்கிராமங்கள் தொடக்கம் பிற்பட்ட காலங்களில் உருவான புதிய ஊர்கள் வரை வன்னியின் நிலவுடல் முழுவதும் நீர்கிளை விட்டுப் பரவி நிலங்களின் பகுதியாகவும் நிலங்களை ஒன்றோடு ஒன்று பின்னும் நூற்பாவாகவும் தொழிற்படுகின்றன.

அணைக்கட்டுகள், பாலங்கள், தொங்கு பாலங்கள், கலிங்குகள் என்று அவற்றோடு இணைந்த பழைய நீர் மேலாண்மை கட்டுமானங்களும் அதன் பகுதியாகக் காணக்கூடிய பொக்கிஷமாக அமைகிறது. காணும் இடமெங்கும் வன்னி பண்பாட்டு உருவாக்கத்தில் நீர்முக்கிய பங்காற்றிக் கொண்டிருப்பதை வெளிப்படுத்துவதோடு நீண்ட வரலாற்றை உடைய நீர் முகாமைத்துவ வெளிப்பாடுகள் அவ்வகையில் வன்னியின் மரபுரிமை சொத்துக்களின் முதுகெலும்பாக இருந்து வருவது அனைவரும் அறியக் கூடியதாக இருக்கின்றது.

வயல்கள், தோட்டங்கள், சதுப்புக்கள், சிறு குன்றுகள், பெரும் மரங்கள் பற்றைகள் காடுகளால் உருவாகியுள்ள அதன் நிலவுருவம் ஒரு புறம் மனிதனால் உருவாக்கப்படாததும் இயற்கையால் தரப்பட்ட ஆறுகள், மரங்கள், பறவைகள் மற்றும் விலங்குகள் முதலான அப்பிராந்தியத்துக்கே சிறப்பாக உள்ள மரபுரிமைச் சொத்துக்களாக விளங்குகின்றன. அதுமட்டுமன்றி தேக்கு, கருங்காலி, மலைவேம்பு, மகிழ், பாலை, வீரை, சூரை, வாகை வெடுக்குநாறி மற்றும் விண்ணாங்கு முதலான பலவகை மரங்கள் மட்டுமின்றி காடை, கௌதாரி, மயில், செண்பகம், கானாங்கோழி, காட்டுக்கோழி, புளினி, தூக்கணாங்குருவி எனப் பலவகை பறவைகளையும் உடையவையாக இலங்கைத் தீவில் நீர்ப்பறவைகள் செறிந்த இடமாகவும் வடபுலத்தில் வன்னி தனித்துவத்தைப் பெறுகிறது.

அத்தோடு யானை, முள்ளம்பன்றி, கலைமான் வகைகள், மரை, காட்டுப் பூனை, உக்கிளான், சருகுப் புலி என்பவற்றோடு இலங்கையில் சிறுத்தைகள் அதிகம் உள்ள இடமாகவும் வன்னிப் பெருநிலம் காணப்படுகிறது.

அத்தோடு பெருங்கூட்டமாக கதிர்காமத்துக்கும் மடுவுக்கும் புறப்பட்டுச் செல்வதாக நம்பப்படும் வண்ணத்துப்பூச்சி படைகளும் வன்னியின் சிறப்பம்சங்களுள் சிலவாகும். இவற்றைப் பாதுகாப்பது என்பது வன்னியின் பொருளாதார வாழ்க்கையின் அடிப்படைகளை பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் பிரதான நோக்கமாக கொண்டு காணப்படுவதை அங்குள்ள மக்கள் குறிப்பிடுவதன் ஊடாக அறிய முடிகிறது.

அந்த வகையில் வன்னி பிரதேசம் விவசாயத்துக்கு மட்டுமன்றி கடலுணவு உற்பத்தி, குடி தண்ணீர் தேவைகளைப் பூர்த்தி செய்தல் முதலான பலவற்றோடும் இணைந்ததாகவே அமைந்துள்ளது. ஒரு வகையில் நீர் வளமும் வன வளமும் ஒன்றை ஒன்று பாதுகாத்து மேம்பாடடையச் செய்வது இதற்கு அப்பாலும் பொருளாதார ரீதியாக புதிய திசைகளை நோக்கி மக்களை நகர்த்துவதற்கு இந்த முல்லை, குறிஞ்சி, நெய்தல் நிலமாக வன்னி பெருநிலம் காட்சியளிக்கின்றது.

வன்னிப் பெருநிலமானது எழுத்தாவணங்கள், வாய்மொழி வரலாறுகள், புராணங்களின் சாட்சியாகப் பண்டைக் காலம் முதல் இன்றுவரை முக்கியம் பெறுகின்றது. உதாரணமாக பாலி ஆறு வெறும் நீர்முனையம் மட்டுமல்லாமல், அது வரலாற்று முனையமாகவும் பண்பாட்டுத் தளமாகவும் காணப்படுவதோடு இவ்வாறான விடயங்கள் வன்னி பெருநிலத்தின் சாட்சியங்களாக காணப்படுகின்றன.

வன்னிப் பெருநிலத்தின் இத்தகைய சிறப்பம்சங்களை வெறுமனே அபிவிருத்தி என்ற ஆடம்பரமான

தொடர்ச்சி ▼

# வட புலத்தில் வன்னிப்பெருநிலம்!

**தொடர்ச்சி ▲**

சுலோகத்தில் எத்தகைய கேள்விகளும் விவாதங்களும் இன்றி ஈடுபடுத்த முடியாது. ஏனெனில் காலத்தின் சாட்சியாக பல திட்டமிட்ட பேரினவாத கட்டமைப்பிற்குள் மரபுரிமைகளும் பண்பாட்டு சின்னங்களும் பொருளாதார முனைப்பு வாய்ந்த வளங்களும் இரையாகிக் கொண்டிருக்கின்றன.

எனவே இத்தகைய இயற்கை மரபுரிமைகளை ஒரு வலைப்பின்னல் ஆக்கி ஒரு பரந்தபட்ட இயற்கை மரபுரிமைப் பிரதிநிதித்துவத்தை உருவாக்கும் அதே வேளை சூழல் சுற்றுலாவுக்குமான மிகப் பொருத்தமான ஒரு களத்தையும் நிறுவ முடியும். அந்த வகையில் இயற்கை மரபுரிமைகளையும் பாதுகாக்கின்ற செயற்பாடுகளில் முதலில் கவனம் செலுத்தப்பட வேண்டும் அத்தோடு துறை சார் நிபுணத்துவம் என்பவை முறையாக உறுதி செய்யப்படுவதோடு அதனோடு கூடிய கட்டுமானங்களாக இருக்கட்டும் அல்லது ஏனைய அபிவிருத்தி செயற்பாடுகளாக இருக்கட்டும், அதன் நிலத்தோடு பண்பாட்டோடு பின்னிப்பிணைந்தவையாக அதனை வடிவமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இதன் மூலமாக அதன் இயற்கை மரபுரிமையின் மறு பகுதியாக இத்தகைய விடயங்களை மேற்கொள்வதன் மூலம் பண்பாட்டு மரபுரிமைகளையும் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்து செல்ல முடியும்.

அவற்றின் இயல்புகள் அதன் சூழல் சார்ந்த தனி பண்புகள் முதலியவற்றால் அரண் செய்யப்பட்டு ஏனையவற்றோடு சங்கிலிக் கோர்வையாகப் பிணைக்க முடியும். குறிப்பாக சில நீர்முனைகள் குளியல் உல்லாசத் தோணித்துறைகள் இன்னும் சில சுற்றுலா மீன் தூண்டில் துறைகள் ஆரோக்கிய மரபு குளியல் மற்றும் இன்னும் சில நீர்ப்பறவை காட்சியிடங்கள் முதலான சிறப்பு மையங்கள் ஆக்கி இணைக்கப்பட வேண்டும்.

இதனை ஒட்டி மேலும் புதிய புத்தாக்க நடைமுறைகளை நீர்முனைகள் அது சிறப்பு கருதி உருவாக்கலாம், பாலியாற்றங்கரையில் பாலியம்மன் பள்ளு படிக்கும் ஆற்றலை ஒரு பண்பாட்டு மரபுரிமைக் களத்தை திறக்கலாம். அதனை விட வனப் பூங்காக்கள், சிறுவர் வனக்கல்வி விளையாட்டு வளையங்கள் மற்றும் புதுவகையான பிராந்திய தனித்துவத்தை முன்னிறுத்திய வனவிலங்கு சரணாலயங்கள், பறவை மையங்களை உருவாக்க முடியும். அதனைப் போலவே தமிழ் விவசாயத்துக்கான அரும்பொருளகத்தை விவசாய கருவிகள் விவசாய முறைமைகள் பயிர்கள் விதைகள் உள்ளிட்ட பலவற்றை கொண்டிருக்கும் வகையில் அதனை மேற்கொண்டு அத்தகைய சிறப்பு அம்சங்களை காலம் கடத்தி கொண்டு செல்ல முடியும்.

இவ்வாறாக வடபுலத்தில் வன்னி பெருநிலமானது வரலாற்று ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் அதேசமயம் காட்சி இடமாக ஒரு பாரம்பரிய பண்பாட்டு மையமாக இயற்கை உயிரியல் பல்வகைமை கட்டமைப்புகள் நிரம்பிய இடமாக காணப்படுகிறது. அத்தோடு அதன் இயற்கை எழில் இவற்றின் உள் நின்று காட்சியளிக்கின்றன. உள்ளூர் நாட்டுப்புறப் பண்புகள் அதன் வெளிப்பாடுகள் என்பன காலம் கடந்தும் பேணப்பட வேண்டும் பாதுகாக்கப்பட வேண்டும்.







# யாழ். பல்கலை மாணவர்களும் சமூக மயமாக்கல் சிந்தனைகளும்!

தமிழ் பேசும் மக்களினுடைய பண்பாட்டையும், வாழ்வியலையும் பிரதிபலிக்கும் பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வகிபாகம் இன்றியமையாததாகும். தமிழ்த் தேசியக் கருத்தியலின் நரம்பு மையமாகத் திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது, தமிழர் தேசமென அடையாளப்படுத்தப்படும் பிரதேசங்களில் உள்ள மக்களை சமூக மயப்படுத்தும் செயற்பாட்டை வரலாற்றின் மிக முக்கிய சந்தர்ப்பங்களில் மேற்கொண்டுள்ளது. சமகாலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதை விவாதிப்பதன் ஊடாக இக்கட்டுரையானது கட்டமைக்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றுபட்டுத் திரட்சியுடன் வளம் மிக்க தமிழ் சமுதாயத்தை உருவாக்கிய காலங்கள் வரலாற்றில் மறுக்க முடியாத உண்மையாகும்.

2009 ஆம் ஆண்டு விடுதலைப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டதன் பிற்பாடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சமூகங்களுடன் இணைந்து செயற்படுகின்றமை தேய்மானமடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பின்நவீனத்துவ உலகில் சமூக ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்தப்படும் இளைஞர் குளாம்கள் சமுதாய நலன்கள் மீது கவனம் செலுத்தாத வெறுமனே சுயநலன் மற்றும் சுகபோகங்களைப் பின்பற்றுபவர்களாக சித்தரிக்கப்படுகின்றனர். இச்சித்தரிப்புகளானவை 100வீ உண்மை கொண்டவை என்றோ அல்லது முற்று முழுதாக தவறானது என்பதையோ கூற முடியாது.

இன்றைய இளைய சமுதாயம் என்பது கேலிக்கைக் காணொளிகளைப் பதிவு செய்வதும், போதைப் பாவனையில் ஈடுபடுவதும், களியாட்டங்களில் ஈடுபடுவதும், தேவையற்ற ஆயுதக் கலாச்சாரத்தைப் பின்பற்றுபவர்களும் என்ற பார்வையானது சமூக ஊடகங்களினூடாக பதியப்பட்டுள்ளது.

இத்தகைய பார்வையானது தவறென்பதையும் இளைஞர்கள் என்பவர்கள் புரட்சிமிக்கவர்கள் என்ற பார்வையைக் கட்டமைக்க வேண்டிய மகோன்னதமான கடமையும் வரலாற்றுப் பொறுப்பும் பல்கலைக்கழக மாணவர்களிடமே காணப்படுகிறது.

இளைஞர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கான முன்னுதாரணமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களே காணப்பட வேண்டும்.

ஆனால் தற்போது பல்கலைக்கழக மாணவர்கள் என்றால் பகிடிவதை செய்பவர்கள், வேலையில்லாமல் போராட்டம் செய்பவர்கள், களியாட்டங்களில் ஈடுபடுபவர்கள் என்ற ஆழமான சிந்தனைகள் சிலவும் சமூகத்திடம் விதைக்கப்பட்டுள்ளது. அத்தகைய விம்பத்தை உடைத்து யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ் பேசும் மக்களின் வாழ்வியலின் பிரதிநிதிகள் என்ற சிந்தனையானது மீண்டும் கட்டமைக்கப்பட்ட வேண்டும்.



**பவித் அருள்வசந்,**
**ஊடகக்கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

மேலும் பாராட்டத்தக்க சமூக ரீதியான செயற்பாடுகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உதாரணமாக, தமிழ்த்தேசிய சிந்தனையை அறிவியல்மயப்படுத்துதல், தமிழ்த்தேசங்கள் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடுதல், கிராமிய நூலகங்களை வளப்படுத்துவதற்குப் புத்தக அன்பளிப்பு, இயற்கையை மேம்படுத்துவதற்கு மரநடுகைச் செயற்றிட்டங்கள், அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடுதல், சூழலை தூய்மையாக்குதல், இரத்ததான முகாம் நடத்துதல், நினைவேந்தல்களை மேற்கொள்ளுதல் போன்ற பல செயற்பாடுகளைக் குறிப்பிட முடியும்.

பல்கலைக்கழக மாணவர்கள் சமூகத்துடன் இணைந்து செயற்பட வேண்டியது மிக அவசியமாகின்றது. ஏனெனில் இந்த இளைஞர் தலைமுறையினரையே இந்தச் சமூகம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.

பல்கலைக்கழகங்களை சமூகங்களுடன் இணைப்பதற்காக பல்கலைக்கழக மாணவர்கள் ஒவ்வொரு பிரதேசங்கள் நோக்கியும் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்த வேண்டும்.

வட கிழக்கு மற்றும் மலையகத்தின் அனைத்து

தொடர்ச்சி ▼




# யாழ். பல்கலை மாணவர்களும் சமூக மயமாக்கல் சிந்தனைகளும்!

தொடர்ச்சி ▲

கிராமங்களுக்களில் உள்ள மக்களின் தேவைகளையும் பல்கலைக்கழக மாணவர்கள் தங்களுடைய வலைப்பின்னல் வாயிலாக ஒருங்கிணைத்து அந்தச் சமூகத்தின் மேம்பாட்டுக்கான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு முயலுதல் வேண்டும்.

குறிப்பாகப் உட்கட்டுமானமும் மனித வலுக்களும் குறைவாக உள்ள பாடசாலைகளுக்குச் சென்று கருத்தரங்குகளை மேற்கொள்ளுதல் மற்றும் விழிப்புணர்வு நாடகம் மற்றும் தெருக்கூத்துக்களை நடத்துவதன் மூலம் எங்களது பண்பாட்டு பரிணாமத்தினூடாக கல்வியை வளர்ப்பதற்குப் பாடசாலை மாணவர்களை ஊக்கப்படுத்தல் வேண்டும்.

அண்மைய சில ஆண்டுகளாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வடுக்களை இளைய தலைமுறைக்கு கடத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி கொடுத்தல் செயற்பாடானது சமுகத்தில் அதிகம் நேர்மறையான கருத்துக்களை பரப்பிய சிறந்த செயற்பாடாகும்.

நிலமீட்புப் போராட்டங்களில் பங்குகொள்வது குறிப்பாக மயிலத்தமடு, வெடுக்குநாறிமலை, குருந்தூர் மலை போன்ற இடங்களில் போராட்டங்களை மேற்கொண்டு மக்களை விழிப்படையச் செய்தல் போன்ற செயற்பாடுகளும் தமிழ்த் தேசிய ரீதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. எனினும் இந்தச் செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப் படுகின்றனவா? என்ற கேள்விகளும் எழுப்பப்படுதல் அவசியமானதாகும்.

இந்தச் செயற்பாடுகளை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய தார்மீகப் பொறுப்பும் காணப்படுகிறது.

இதைத் தவிர அரசாங்கத்தால் கொண்டுவரப்படும் சட்ட திட்டங்கள் என்பவற்றை தமது தொலைநோக்குப் பார்வைக்கு உட்படுத்தி அதனைக் கட்டுடைத்துப் பார்த்துத் தமிழ் பேசும் மக்களுக்குத் தெளிவூட்ட வேண்டிய அரசியல் கலாச்சாரப் பண்பும் பல்கலைக்கழக மாணவர்களிடம் காணப்படுகிறது.

எனினும் இன்றைய பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் அச்சுறுத்தல் மிக்க சூழலில் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் இடையில் காணப்படும் தொடர்பாடலில் சிறிய மந்த நிலை காணப்படுகின்றது.

எதிர்காலத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இத்தகைய செயற்பாடுகள் மீது அதிகம் கவனம் செலுத்துவது அவசியமாகும். அத்தகைய எனது பார்வைக்கு உட்பட்ட விடயங்களைப் பகிர்கின்றேன்.

1. தமிழ் பேசும் மக்கள் அரசியல் மற்றும் சமூக ரீதியில் சிறு சிறு குழுக்களாக பிரிந்து காணப்படுகின்றார்கள். அவற்றை ஒன்று திரட்டி தமிழ் மக்களைத் தேசமாகத் திரட்ட வேண்டிய கடப்பாடு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு உண்டு.

2. இன்று தமிழ்பேசும் சமுகத்தில் இளைஞர்கள் பொருளாதார தேவையின் நிமித்தம் அதிகம் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்கின்றார்கள். இதனால் எம் சமூகத்தின் சனத்தொகை வலு வேகமாக் குறைகின்றது. இவ் இடம்பெயர்வுகளை தவிர்த்து சுய பொருளாதார முகாந்தரங்களை எம் சமுகத்தில் உள்ளவர்கள் உருவாக்குவதற்கான அறிவியல், பொருளாதார, தொழில்நுட்ப சூழல்களை உருவாக்குதல் வேண்டும்.

3. 2009 இற்கு முன்னர் விடுதலைப் போராட்ட காலத்தில் நலிவடைந்திருந்த சாதியக் கட்டுமானங்கள் மீண்டும் சமுகத்தில் வேரூன்றுவதற்கு முனைகின்றது. இத்தகைய செயல்களைத் தடுத்து நிறுத்தித் தமிழ்த் தேசிய இனம் என்ற கட்டமைப்பை வலுப்பெறச் செய்ய வேண்டிய பணியும் பல்கலைக்கழக மாணவர்களுக்குரியது.

இவ்வாறு ஏராளமான கடமைகள் மாணவர்களுக்கு உள்ளன. இவற்றை வெற்றிகரமான தொடர்பாடலுடன் சிறந்த வளமான சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

மக்கள் மத்தியில் பல்கலைக்கழகங்கள் குறித்த பார்வைகளை இவ்வாறான சிறந்த செயற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக நேரான பார்வையாக மாற்றியமைக்கலாம்.

ஒரு காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடுகள் அரசியல் மாற்றங்களையே ஏற்படுத்தி இருந்தன. ஆனால் இன்று அவ்வாறான தொரு நிலைமை மருகிக் கொண்டு செல்கின்றது. இவையனைத்தையும் மாற்றியமைத்துச் சமூகத்துடன் இணைந்து செயலாற்றும், சிந்திக்கும் பல்கலைக்கழக மாணவர்களாக ஒவ்வொருவரும் சுயமாக மாற வேண்டும். தனியொருவனில் ஆரம்பமாகும் மாற்றம் தத்தமது சமூகத்தையும் சேர்த்து மாற்றியமைக்க வேண்டும். நல்லதொரு மாற்றத்தை நோக்கி தமிழர் தேசத்தில் இருந்து பயணிப்போம்.

# கல்வி மறுசீரமைப்பில் தரம் 06 பாடநூலில் நடந்த குழப்பத்துக்கு கல்வி அமைச்சே பொறுப்பு!

## வேலுசாமி இராதாகிருஷ்ணன் விசனம் தெரிவிப்பு



(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

இலங்கையின் கல்வி மறுசீரமைப்பு அடிப்படையில் தரம் 06 பாட நூலில் பல குளறுபடிகள் ஏற்பட்டுள்ளன. இந்த குளறுபடிகள் ஏற்படுவதற்கு காரணம் கல்வி அமைச்சினுடைய பிழையான செயற்பாடுகள்தான். தேசிய கல்வி நிறுவனத்தின் இயக்குனர் பதவி விலகி இருக்கிறார். அது மட்டு போதாது இதற்கு முலுமையான பொறுப்பையும் கல்வி அமைச்சுக் கூற வேண்டும்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

கொட்டகலை பகுதியில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் கூறிப்பிடுகையில்,

2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற கல்வி மறுசீரமைப்பில் அதற்கு நான் தான் தலைவராகச் செய்யப்பட்டேன் அந்த காலப்பகுதியில் அமெரிக்காவின் உதவியோடு கல்வி சீரமைப்பு திட்டங்களை முன்னெடுத்தோம். ஆனால் அதனை முற்றும் முழுதுமாக அதனை இவர்கள் புறந்தள்ளிவிட்டு புதிய ஒரு கல்வி சீரமைப்பு திட்டத்தை கொண்டுவந்து மாணவர்களுக்கு பொருத்தமற்ற ஒரு விடயத்தை கொண்டு வந்துள்ளார்கள்.

ஆகவே இந்த முறைமையை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம். இதற்கான பொறுப்பை கல்வி அமைச்சு ஏற்க வேண்டும். நாட்டின் பிரதமராக இருக்கின்ற கல்வி அமைச்சர் ஹரினி அமரசூரிய பொறுப்பு கூற வேண்டும்.- என்றார்.



# காலநிலை மாற்றம்...!



**நடராசா கோபிராம்,**
உளவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்.

வெயில் நீள்கிறது நிழல் குறைகிறது,
இது வானிலை அல்ல – நம் செயல்களின் சாட்சி
மழை தாமதம் மனதைப் பிளக்கிறது,
விவசாயியின் கண்களில் பதற்றம் விதைக்கிறது

வெள்ளம் வீடுகளை மட்டும் அல்ல,
நம்பிக்கையையும் அடித்துச் செல்கிறது
குழந்தைகளின் மௌனப் பயம்...
நாளைய நாளைக் கேள்விக்குறியாக்குகிறது

உளவியல் காயங்கள்
அமைதியாக சமூகத்தில் வேரூன்றுகின்றன,
“சாதாரணம்” என நாம் கடந்து செல்லும்
ஒவ்வொரு அலட்சியத்திலும்

வறட்சி வயிற்றை மட்டுமல்ல,
உறவுகளையும் வறட்சச் செய்கிறது.
தனிநபர் அலட்சியம்
கூட்டுக் குற்றமாக மாறுகிறது
விழிப்புணர்வு வாசகம் அல்ல,
பழக்க மாற்றமே அதன் அர்த்தம்.
மரம் வெட்டும் கையில்
எதிர்காலம் இரத்தம் சொட்டுகிறது

நிலம் பேசுகிறது – நாம் கேட்கிறோமா?
அறிவியல் எச்சரிக்கிறது – நாம் செய்கிறோமா?
இப்போது செய்
இழப்புக்கு மீள வாய்ப்பு இல்லை!




# டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்!

## சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி விசேட அறிவித்தல்

**(பாறுக் ஷிஹான்)**

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நோயாளர்கள் இனம்காணப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் மக்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி விசேட அறிவித்தல் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

எமது அண்மைய கள ஆய்வுகளின் போது பின்வருவன இனங்காணப்பட்டுள்ளன.

மூடப்படாத கிணறுகள், குழாய்க் கிணறுகள், நீர்த்தாங்கிகள், கூரைப் பீலிகள், பராமரிக்கப்பாடாத மலசலகூடங்கள், மூடப்பட்டுள்ள வீடுகள், பராமரிக்கப் படாத வெற்றுக் காணிகள், கடல் ஓரங்களில் காணப்படும் தோணிகள், படகுகள் என்பன ஆட்கொல்லி டெங்கு நுளம்புகளின் பெருக்கத்துக்கு மிகவும் சாதகமான காரணியாக உள்ளன.

எனவே கிணறுகள், குழாய்க் கிணறுகள், நீர்தாங்கிகள், ஆகியவற்றை நுளம்பு வலைகளால் மூடுங்கள். கூரைப்பீலிகளை அகற்றிவிடுங்கள். வீடுகள், வெற்று வளவுகள், பராமரிக்கப்படாத வெற்றுக் காணிகள், வீடுகள், படகுகள், தோணிகள் ஆகியவற்றை நுளம்புகள் பெருகாத வண்ணம் தொடர்ச்சியாக பராமரியுங்கள்.

அத்துடன் உங்கள் சுற்றாடலில் நுளம்பு பெருகும் சாதனங்களை இல்லா தொழிக்குமாறும் வேண்டப்படுகின்றீர்கள்.

இந்தச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி உங்களையும் உங்கள் பிள்ளைச் செல்வங்களையும் டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் மிகமனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருமுன் காப்போம், வளமாய் வாழ்வோம், டெங்கு மரணத்தை தவிர்ப்போம். நீங்கள் எங்களுக்கு வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.- என்று தெரிவித்துள்ளார்.

# லிந்துல்ல மாவட்ட வைத்தியசாலையில் நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறத் தடை!

## மாற்று நடவடிக்கை எதுவும் இல்லை என்று மக்கள் ஆதங்கம்

**(மஸ்கெலியா நிருபர்)**

கடந்த பல மாதங்களாக லிந்துல்ல மாவட்ட வைத்தியசாலையில் நோயாளிகள் தங்கியிருந்த நிலையில் சிகிச்சை பெற்று வருவது இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான மாற்று நடவடிக்கை இன்று வரை எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதியில் உள்ள மக்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல மாதங்களுக்கு முன்பு லிந்துல்ல மாவட்ட வைத்திய சாலையின் மேல் மலைப் பகுதியில் இருந்து பாரிய கற்கள் வந்த காரணத்தாலும் வைத்திய சாலைக்கு அருகில் கங்கை ஒன்று செல்லும் நிலையிலும் வைத்திய சாலை பகுதியில் பூமி தாழ் இரக்கம் ஏற்பட்ட காரணத்தாலும் நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறுவது இடைநிறுத்தப்பட்டது.

நுவரெலியா வைத்திய சாலைக்கே நோயாளர்கள் சென்று தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறிப்பாக இந்த வைத்திய சாலை பல தசாப்தங்களுக்கு முன் வெள்ளையர்களால் கட்டப்பட்டது.

இவ் வைத்திய சாலையில் ஏனைய வைத்திய நிகழ்வுகள் செய்வனே இடம் பெற்று வந்த போதிலும் தங்கி இருந்த சிகிச்சை பெற்று கொள்ள முடியாதுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள பெருந்தோட்ட மக்கள் மற்றும் நகர கிராம மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சுகாதார அமைச்சர் முன் வந்து நவீன முறையில் பாதுகாப்பான இடத்தில் நிரந்தர வைத்திய சாலை ஒன்றை அமைத்து தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தொழிற்சங்கக் கட்டமைப்பிலிருந்து மலையகம் விடுபட்டு வருகிறது!

## மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் விஜேசந்திரன் தெரிவிப்பு

(மஸ்கெலியா விசேட நிருபர் )

தொழிற்சங்கத்தை முழுமையாக நம்பியிருந்து அரசியல் தொழிற்சங்க ரீதியாக செயற்பட்டு வந்த மலையகம் இன்று படிப்படியாக தொழிற்சங்கக் கட்டமைப்பிலிருந்து விடுபட்டு வருகின்றது என மலையக மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் பேராசிரியர் எஸ். விஜேசந்திரன் தெரிவிதுள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் பெ. சந்திர சேகரனின் 16 ஆவது சிரார்த்த தினம் புத்தாண்டு தினத்தன்று ஹட்டன் தலைமைப் பணிமனையில் இடம்பெற்றபோது இவ்வாறு கருத்து தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்,

மலையக மக்கள் முன்னணி அமரர் சந்திரசேகரன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட போது, தொழிற்சங்க சிந்தனையோடு இருந்தது. வடக்கு, கிழக்கி ஏற்பட்டிருந்த மாற்றங்கள், புரட்சிகர சிந்தனைகள் சார்ந்து உருவாக்கப்பட்ட இந்த அமைப்பில் அமரர் ஏ. லோரன்ஸ், எஸ். கிருஷ்ணன், மு.சிவலிங்கம், வி.டி. தர்மலிங்கம் போன்றோர் முக்கிய பங்கு வகித்துள்ளார்கள். அஹிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டு சாதித்ததால், மலையகத்திலும் அதற்கு வெளியிலும் பேசப்படும் ஒரு வராகவும் சக்தியாகவும் பரிணமித்தார்.

அமரர் சந்திரசேகரன் அரசியலுக்குப் பிரவேசித்து அமைச்சரான போது, மலையகத்தில் முதன் முதலாக தனி வீட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்ததோடு, 25 ஆயிரத்துக்கும் மேலான வீடுகளைக் கட்டியிருந்தார். ஆசிரிய நியமனங்கள், கிராமசேவகர் நியமனங்கள் பெறுக் கொடுத்ததோடு, பலவந்தமாக இந்தியா செல்ல இருந்தவர்களைத் தடுத்து நிறுத்தி இந்த நாட்டில் வாழ வேண்டும் என்ற தைரியத்தையும் கொடுத்தார்.



மேலும் மலையக அரசியலில் படித்தவர்களை இணைத்துக் கொண்டும், அரச உத்தியோகத்தர்கள் போன்றோரையும் இணைத்துக் கொண்டு மலையக மக்கள் முன்னணியை வழிநடத்தி அரசியல் மாற்றத்துக்கு வித்திட்டிருந்த பெருமையும் அவருக்கு இருக்கின்றது. அதனால்தான், அவர் மறைந்து 16 ஆண்டுகள் ஆகியும் நினைவு கூரப்படுவதோடு, மலையக சரித்திரத்தில் இடம்பிடித்து என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்.

மலையக பெருந்தோட்ட சமுகம் தொழிற்சங்க அரசியலையே முன்னிலைப் படுத்தி வளர்ந்து வந்துள்ளது. எனினும், இன்று படிப்படியாக தொழிற்சங்கக் கட்டமைப்பிலிருந்து விடுபட்டு வருவதைக் காணலாம். பெருந்தோட்டங்களில் இன்று 99 ஆயிரம் பேர் மாத்திரமே நிரந்தரத் தொழிலாளர்களாக உள்ளார்கள். அவர்களில் 7 ஆயிரம் பேர் அரச தோட்டங்களிலும் ஏனைய 83 பேர் கம்பனி தோட்டங்களிலும் இருக்கின்றார்கள். தோட்டங்களில் இருந்த பெரும்பாலான தொழிலாளர்கள் வேறு தோட்டங்களுக்கு அன்றாட சம்பளத்துக்கு வேலைக்குச் சென்றுள்ளார்கள். புதிகாத வேலைக்கு பெயர் படிந்து கொண்டவர்களும் தொடர்ந்து வேலை செய்ய விரும்புவதில்லை. எனவே, எதிர்காலத்தில் பெருந்தோட்டத் துறை கேள்விக் குறியாக மாறியுள்ளது. தொழிற்சங்கம் இல்லாமல் அரசியல் செய்ய முடியாது என்ற கட்டமைப்பு மாறி வருகின்றது.

நாம் அளங்கையர், அனைவரும் ஒரு தாய் மக்கள் என்பது வரவேற்கத் தக்கது. இருந்தாலும் நாம் எமது அடையாளத்தை இழந்து விடாமல் கலை கலாசார விழுமியங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். மலையக மகளுக்கு எண்டும் பாதுகாப்பு தேவை என்பதை மலையக மக்கள் முன்னணி வலியுறுத்தி வருகின்றது. முழு மலையகமும் பாதுகாப்பற்ற பிரதேசங்களாக மாறிவிடவில்லை. எனவே, மலையகத்திலிருந்து வேறு இடங்களுக்கு குடிபெயர வேண்டிய அவசியமும் இல்லை.- என்றார்.

# கைதடி பொதுவிளையாட்டுத் திடலுக்கு மாமனிதர் ரவிராஜ் திடல் எனப் பெயரிடுக!

## பிரதேச சபை உறுப்பினர் சிவபாதம் வேண்டுகோள்

(த.சுபேசன்)

கைதடி பொதுவிளையாட்டு திடலுக்கு மாமனிதர் ரவிராஜ் விளையாட்டுத் திடல் என பெயரிடப்பட வேண்டும் என்று சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் சிவபாதம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரிப் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட கைதடி வடக்கு வட்டாரத்தில் அமைந்துள்ள பிரதேச சபையின் ஒரே ஒரு விளையாட்டு மைதானமான கைதடி பொது விளையாட்டு மைதானமானது பிரதேச மட்ட, மாவட்ட மட்ட, மாகாண மட்ட போட்டிகள் நடத்தக் கூடிய வகையில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதான மைதானமாக புனரமைப்பு செய்யப்பட வேண்டும்.

முதலில் விளையாட்டு திடலுக்கு முழுமையான திட்டமுன்மொழிவு ஒன்று உருவாக்கி அதன் அடிப்படையில் செலவறிக்கை தயாரிக்கப்பட்டு புனரமைப்பு வேலைகள் நடைபெறவேண்டும்.



அத்துடன் பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டு பாதீட்டில் கைதடி விளையாட்டு மைதானத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 20 லட்சம் ரூபாவை முழுமையாகப் பயன்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். 2025 ஆம் ஆண்டில் நிதியை பயன்படுத்த முடியாது போனால் மேற்படி நிதியை குறித்தொதுக்கி 2026 ஆம் ஆண்டு முழுமையாக பயன்படுத்த சபை அங்கீகாரம் வழங்க வேண்டும்.

பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் முன்மொழிவின் போது கைதடி பொது விளையாட்டுத் திடல் புனரமைப்புக்கு ஏற்கனவே உள்ள 20 இலட்சம் ரூபாவுடன் மேலதிகமாக 20 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து 40 லட்சமாக ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கைதடி வடக்கு வட்டாரத்தின் உறுப்பினராக என்னால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு ஏனைய பிரதேச சபை உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தனர்.

அத்துடன் தென்மராட்சி மக்களின் நலனுக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த மாமனிதர் நடராஜா ரவிராஜின் பெயரைக் கைதடி வடக்கு வட்டாரத்தில் அமைந்துள்ள பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானத்துக்கு 'மாமனிதர் ரவிராஜ் விளையாட்டுத்திடல்' எனப் பெயரிடப்பட்டு அழைக்க வேண்டும் என என்னால் முன்வைக்கப்பட்ட பிரேரணை பிரதேச சபை உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.- என்றார்.






# கல்விச் சீர்திருத்த விடயத்தில் அரசு சர்ச்சைகளுக்கு முடிவு கட்டவேண்டும்

## பெண்கள் படையணி அமைப்பின் தலைவி தெரிவிப்பு




**(பாறுக் ஷிஹான்)**

கல்விச் சீர்திருத்த விடயத்தில் அரசு சர்ச்சைகளுக்கு முடிவு கட்டவேண்டும் என்று பெண்கள் படையணி அமைப்பின் தலைவி நிகாஸா ஷர்பீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் பாலர் பாடசாலையின் வருடாந்த பட்டமளிப்பு மற்றும் பரிசளிப்பு விழா பாலர் பாடசாலையின் பொறுப்பாசிரியர்களான ஏ.எம்.அஸ்மினா, எம்.எம். பர்வீன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் அதன் அதிபர் எம்.எஸ்.எம் ஆரிப் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது கலாச்சார மத்திய நிலையத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்த வேண்டுகோளை நிகாஸா ஷர்பீன் விடுத்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில் கல்வி அமைச்சின் புதிய பாடத்திட்டத் தொகுதிகள் தொடர்பாக எழுந்துள்ள விமர்சனம் மற்றும் பாலியல் கல்வி பற்றிய சர்ச்சை என்பன இன்று பெரும் பூதாகரமாக மாறியுள்ளது.

இதற்கு எதிராக நாட்டின் பெண்கள் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் என்பன தங்களது கடும் எதிர்ப்பை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றது.

எனவே இந்த சர்ச்சைகளுக்கு உடன் முடிவு கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

கல்வி என்பது ஒரு மனிதனின் வாழ்க்கையை ஒளியூட்டும் தீபம் என்றால், அந்தத் தீபம் முதன்முதலில் ஏற்றப்படுவது பாலர் பாடசாலையில் தான்.

என் அன்புச் செல்வங்களான பிள்ளைகளே, இன்று நீங்கள் பெறும் இந்தப் பட்டங்களும் பரிசுகளும் உங்கள் சிறு வயதிலேயே நீங்கள் எடுத்த முதல் வெற்றிப்படிகளாகும்.

இன்றைய நிகழ்வில் இடம்பெறும் விளையாட்டு, பாடல், நடனம், ஓவியம், எழுத்து இவையெல்லாம் உங்கள் அறிவையும் திறமையையும் வளர்க்கும் வழிகளாகும்.

அன்புக்குரிய பெற்றோர்களே, பிள்ளைகளின் முதல் ஆசிரியர்கள் நீங்கள்தான். புத்தகங்களைவிட உங்கள் நடத்தையும், வார்த்தைகளும், பொறுமையும் பிள்ளைகளுக்கு பெரும் பாடமாக அமைகின்றன.

மதிப்பெண்களைவிட மதிப்பீடுகள், போட்டியைவிட ஒத்துழைப்பு, வெற்றியைவிட நல்ல மனிதராக உருவாகுதல் என்பதற்கு முக்கியத்துவம் வழங்குங்கள்.

பிள்ளைகளின் திறமைகளை ஒப்பீடு செய்யாமல், அவரவர் தனித்தன்மையை ஊக்குவியுங்கள்.

மதிப்புக்குறிய ஆசிரியர்களே, பாலர் கல்வி என்பது அடித்தளத்தை அமைக்கும் மிக முக்கியமான கட்டமாகும். உங்கள் பொறுமையும் அர்ப்பணிப்பும் தான் எதிர்கால சமூகத்தை வடிவமைக்கிறது. உங்களின் சேவை என்றும் போற்றுதலுக்குரியது.

எம்.எஸ்.காரியப்பர் பாலர் பாடசாலையின் கல்விச் சேவையை சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும்பாலும் குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களின் பிள்ளைகளே பெற்று வருகின்றனர்.

இந்த மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியை மிகவும் அர்ப்பணிப்புடன் வழங்கி வரும் எம்.எஸ்.காரியப்பர் பாலர் பாடசாலையின் பொறுப்பாசிரியை ஏ.எம்.அஸ்மினா மற்றும் ஆசிரியை எம்.எம்.பர்வீன் ஆகியோரைப் பாராட்டுகின்றேன்.–என்றார்.

# கூட்டங்களில் உறுதியான திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்துதல் வேண்டும்!

## பட்டிப்பளை பிரதேச சபைத் தவிசாளர் திரேசகுமாரன் தெரிவிப்பு

(வவுணதீவு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு, பட்டிப்பளை பிரதேச சபையில் இந்த ஆண்டில் பல அபிவிருத்தி திட்டங்களை முன்மொழிந்திருந்தாலும் அதனை செயற்படுத்தவும் திட்டங்களை முன் கொண்டு செல்லவும் எம்மிடம் போதுமான நிதி இல்லை. இந்த நிலையில் கூட்டங்களில் உறுதிசெய்ப்பட்ட திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.

மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் இளையதம்பி திரேசகுமாரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாகாண சபையால் குறித் தொதுக்கப்படும் நிதியை எதிர்வரும் காலங்களில் அதிகரித்துத் தர வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலையில் வைத்து ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்,

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாங்கள் அபிவிருத்திக் குழுத் தலைவரிடம் எமது பிரதே சபை எல்லைக்கு உட்பட்ட பல அபிவிருத்தி திட்டங்களைச் செய்து தருமாறு கோரியிருக்கின்றோம். அவர் செய்து தருவதாக உறுதி



யளித்துள்ளார். இருந்த போதிலும் எமது பிரதேச சபை பல சவால்களுக்கு மத்தியில் இயங்கி வருகிறது.

குறிப்பாக எங்கள் சபையில் தொழில் புரியும் உத்தியோகத்தர்களுக்கு நாங்கள் பிரதேச சபையின் நிதிகளை அதாவது 2025 ஆம் ஆண்டில் 20 வீதமும் 2026 இல் 40 வீதமும் வழங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் நாங்கள் இருக்கின்றோம்.

இந்த நிதி ஏறக்குறைய 26 மில்லியனுக்கு மேல் வழங்கப்படுகின்றது. இந்த நிதியை ஜனாதிபதி எமக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டாலும் இதுவரையில் அந்த ஏற்பாடுகள் எதுவும் நடைபெற்றதாக அறியவில்லை. அந்த நிதி எங்களுக்கு வழங்கப்படுமானால் 30 வருட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தை ஓரளவு கட்டியெழுப்புவதற்கு உதவியாக அமையும்.

எமது பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்த வண்ணமே உள்ளன. கடந்த ஒக்ரோபர் மாதத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் புதிதாக யானை பாதுகாப்பு வேலி அமைப்பதாக அங்கு வருகை தந்த அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் அதற்கான எந்தவிதமான ஏற்பாடுகளும் நடைபெறவில்லை. கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்ட இந்த யானை வேலி விடயத்தையும் இந்த அரசு கவனத்தில் எடுக்க வேண்டும்.

அதேபோன்று பண்ணையாளர்களின் பிரச்சினை இன்றுவரை தொடர்ந்த வண்ணமே உள்ளது. கால்நடைகளை பராமரிப்பதில் அவர்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

கடந்த அரசும் இதற்குத் தீர்வு பெற்றுத் தரவில்லை. இந்த அரசும் இதுவரை தீர்வு தரவில்லை. மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மேய்ச்சல் தரைக்கான வரைபடங்களை எடுப்பதாகவும் அமைச்சரவைத் தீர்மானங்களைப் பெறுவதாகவும் கூறினார்கள். ஆனால் இதற்கும் முடிவு இல்லாத நிலை காணப்படுகிறது.

எனவே இந்த அரசு எங்கள் மக்களின் கோரிக்கைகளையும் பிரச்சினைகளையும் கூடிய விரைவில் தீர்த்து வைக்க வேண்டும்.- என்றார்.

# உணவு கையாளும் நிலையங்களில் பொலித்தீன் பாவனையைத் தவிருங்கள்



## மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் அறிவுறுத்து

(த.சுபேசன்)

உணவு கையாளும் நிலையங்களில் பொலித்தீன் பாவனையை உடனே தவிருங்கள் என்று மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் அறிவுறுத்தியுள்ளார்.

பூநகரிப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற, உணவு கையாளும் நிறுவன உரிமையாளர்கள் ஊழியர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார் .இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சூடான உணவுப் பொருள்களுடன் பொலித்தீன், பிளாஸ்டிக் தொடர்புறும் போது மைக்கிறோ, நனோ பிளாஸ்டிக் கூறுகள் உருவாகி உணவுடன் கலப்பதால் புற்றுநோய் மற்றும் மலட்டுத் தன்மை ஏற்படக் காரணமாகின்றது. எனவே உடனடியாக உணவு கையாளும் நிலையங்களில் பொலுத்தீன் பிளாஸ்டிக் பாவனையை முற்றாக தவிருங்கள்.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருள்கள் ஏறத்தாழ 500 வருடங்கள்வரை இயற்கையாக பிரிகையுறாது சூழலில் நிலைத்திருக்கக்கூடியவை. லஞ்சீற்றை தட்டிலிட்டு சூடான உணவுப் பொருள்களைப் பரிமாறுதல், பொதி செய்தல், குழம்புசொதி கட்டுதல் போன்ற நடவடிக்கைகளால் உணவுப் பொருள்களில் நச்சு இரசாயனங்கள் சேர்ந்து அவை உடலையடைந்து புற்றுநோயை ஏற்படுத்தவல்லதோடு ஓமோன் சமநிலையைப் பாதித்து மலட்டுத்தன்மையையும் ஏற்படுத்தக்கூடியன.

இந்தப் பொலித்தீன், பிளாஸ்டிக் கழிவுகளை எரிக்கும்போது அவை சுவாசத்துடன் கலந்து புற்றுநோயை ஏற்படுத்துதல், ஆஸ்துமாவை தூண்டுதல் மற்றும் பூமியின் பாதுகாப்புப்படையான ஓசோன் படையில் துவாரத்தை ஏற்படுத்தி பேராபத்தை விளைவித்தல் எனும் பாதிப்புகளை எற்படுத்துகின்றன.

பொலித்தீன், பிளாஸ்டிக் பொருள்களைத் தரை, கடல் வாழ் உயிரினங்கள் உண்பதால் அவை குடல் அடைப்பு ஏற்பட்டு மரணித்தல், போசனைப் பொருள்களை குடல் உறிஞ்ச முடியாததாகி இறத்தல் மற்றும் உணவுச்சங்கிலியூடாக அவை மனிதரை அடைந்து பாதிப்புக்களை ஏற்படுத்தல் போன்ற அபாயங்களும் உருவாக்குகின்றன.

தொடர்ச்சியான பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையால் இதன் நனோ பிளாஸ்டிக் கூறுகள் தாய்ப்பால் மற்றும் விந்துகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் குழந்தைகளின் நோய் எதிர்ப்பு திறன் பாதிக்கப்படல், விந்துகளின் வீரியம் குறைதல் போன்ற பாரதூரமான உயிரியல் கேடுகளும் ஏற்படுகின்றன.

உடனடியாகவே எமதும், எமது எதிர்கால சந்ததியினதும் நல்வாழ்வை முன்னிட்டு உணவகங்களில் பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையை முற்றாக தவிருங்கள். அதற்குப்பதிலாக வாழையிலைகள், வாழைத்தடல்களைப் பயன்படுத்துதல், கண்ணாடி மற்றும் மாபிள் தட்டுக்களை சுடுநீரில் கழுவிப் பயன்படுத்துதல், உணவுத்தர மெழுகு பூசப்பட்ட கடதாசி மற்றும் காட்போட் பெட்டிகளை உணவுப் பொதி செய்யப் பயன்படுத்துதல், சூடான பானங்களைப் பருக உலோக, மாபிள் கோப்பைகளை மட்டுமே பயன்படுத்துதல் என்பன மிகவும் பாதுகாப்பான முறைமைகளாகும்.

அனைவரிடமும் இது குறித்த போதிய அறிவிருக்கின்ற போதிலும் அதைக் கடைப்பிடிக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதால் உடனிருந்து கொல்லும் இந்த பொலித்தீன், பிளிஸ்டிக் கால் ஏற்படும் பிரதிகூலங்களைத் தடுக்க முடியும்.- என்றார்.

# இம்முறை தமிழ்நாட்டில் என்.டி.ஏ. அரசு அமையும்

## அமித் ஷா உறுதி



எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று தேசிய ஜனநாயகக் கூட்டணி தமிழகத்தில் ஆட்சி அமைக்கப் போவது உறுதி என்று பா.ஜ.க. மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான அமித் ஷா தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மேற்கொண்ட தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம் நிறைவு விழா புதுக்கோட்டையில் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றிய அமித் ஷா,

"2026 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் என்.டி.ஏ அரசாங்கம் அமையப் போகிறது என்பதை நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்.

இன்று நடைபெறும் இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தின் மூலம், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் தமிழகமும் இணைய வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

வரும் தேர்தலில் பா.ஜ.க, அ.தி.மு.க. மற்றும் பிற கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து நாங்கள் காங்கிரஸ் மற்றும் தி.மு.கவை எதிர்கொள்வோம்.

ஒவ்வொரு துறையிலும் தி.மு.க. அரசு தோல்வியடைந்துள்ளது. நாட்டிலேயே மிகவும் ஊழல் நிறைந்த அரசாங்கம் என்று ஒன்று இருக்குமானால், அது தமிழ்நாட்டில் உள்ள அரசாங்கம்தான். அதேபோல், தனது தேர்தல் அறிக்கையில் மிகக் குறைந்த வாக்குறுதிகளை நிறைவேற்றிய ஒரு அரசும் தமிழ்நாட்டில் உள்ள தி.மு.க. அரசுதான்.

தனது மகன் உதயநிதியை முதல்வராக்குவதே மு.க. ஸ்டாலினின் ஒரே நோக்கம். தமிழகத்தில் வாரிசு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான நேரம் வந்துவிட்டது. முதலில் கருணாநிதி, பிறகு ஸ்டாலின், இப்போது உதயநிதி. ஆனால், ஸ்டாலினின் இந்த கனவு நிறைவேறப் போவதில்லை.

அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி ஒரு இயல்பான கூட்டணி. நாங்கள் 1998, 2019, 2021 தேர்தல்களில் ஒன்றாகப் போட்டியிட்டோம்.

என்.டி.ஏ தமிழ் மொழிக்கு எதிரானது என்ற தவறான பிரச்சாரத்தை ஸ்டாலின் செய்து வருகிறார். இன்று, நான் தமிழக மக்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சமஸ்கிருதத்தில் ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ் தேர்வுகள் நடத்தப்படுவதற்கு முன்பே, தமிழில் அந்தத் தேர்வுகளை நடத்தத் தொடங்கியவர் பிரதமர் மோடி.

தி.மு.க. அரசு தமிழ்நாட்டைக் குப்பைக் கிடங்காக மாற்றிவிட்டது. மற்ற மாநிலங்களின் கழிவுகள் தமிழ்நாட்டின் புனித நதிகளில் கொட்டப்படுகின்றன.

\2024 ஆம் ஆண்டு முதல், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் என்.டி.ஏ-வின் தீர்க்கமான வெற்றிப் பயணம் நடைபெற்று வருகிறது. 2024 ஆம் ஆண்டில், மோடி மூன்றாவது முறையாகப் பிரதமரானார். முதல் முறையாக ஒடிசாவில் என்.டி.ஏ. அரசாங்கம் அமைந்தது. அதே ஆண்டில், ஆந்திரப் பிரதேசத்திலும் என்.டி.ஏ. அரசாங்கம் அமைந்தது.

ஹரியானாவில், மூன்றாவது முறையாகத் தொடர்ச்சியாக என்.டி.ஏ. அரசாங்கம் அமைக்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டில், 27 ஆண்டுகளுக்குப் பிறகு டில்லியில் எங்கள் அரசாங்கம் அமைந்தது. பீகாரில், நாங்கள் 'இந்தி' கூட்டணியை முழுமையாகத் துடைத்தெறிந்தோம். இப்போது, தமிழகம் மற்றும் மேற்கு வங்காளத்தின் முறை வந்துவிட்டது." என்று தெரிவித்துள்ளார்.

## அமித் ஷாவின் தமிழக வருகை தி.மு.க. ஆட்சிக்கு முடிவுரை

### நயினார் நாகேந்திரன் கருத்து




தி.மு.க. ஆட்சிக்கு முடிவுரை எழுதவே அமித் ஷா தமிழகம் வந்துள்ளார் என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நயினார் நாகேந்திரன் மேற்கொண்ட பிரச்சாரப் பயணத்தின் நிறைவு விழா பொதுக்கூட்டம் புதுக்கோட்டையில் நேற்று மாலை நடைபெற்றது. இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

"பிரச்சாரப் பயணத்தின்போது, தி.மு.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று மக்கள் கோயிலில் வணங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். தி.மு.க. ஆட்சியில் எப்போதும் மக்களுக்கு பயம்தான் உள்ளது. எனவே, தி.மு.க. ஆட்சியை அகற்றுவதற்கு அனைவரும் விரதம் இருந்து, அல்லும் பகலும் பாடுபட வேண்டும்.

கரூரில் த.வெ.க. பிரச்சாரக் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்ததற்கு செந்தில் பாலாஜிதான் காரணம். தி.மு.க. ஒருபோதும் மக்கள் சக்தியுடன் ஆட்சியைப் பிடித்தது இல்லை. தி.மு.க. ஆட்சிக்கு முடிவுரை எழுதவே அமித் ஷா தமிழகம் வந்துள்ளார். வரும் தேர்தலில் ஆட்சி மாற்றம் உறுதியாக ஏற்படும்." என்று தெரிவித்துள்ளார்.



## முதல்வரிடம் மனு கொடுக்க பாய்ந்து வந்த நபரால் பரபரப்பு

தமிழ்நாடு முதல்வரிடம் மனு கொடுக்க பாய்ந்து வந்த நபரால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

விருகம்பாக்கத்தில் ஏ.வி.எம்.சரவணனின் நினைவேந்தல் படத்திறப்பு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், நிகழ்ச்சி முடிந்து காரில் புறப்பட்டு சென்றார்.

முதல்வரின் பாதுகாப்பு அணிவகுப்பு வாகனம் ஆற்காடு சாலையில் வரும்போது, இளைஞர் ஒருவர் முதல்வரிடம் மனு கொடுக்க முயன்றார். அவரை பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

விசாரணையில், மனு அளிக்க முயன்றவர் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வராஜ் (வயது 33) என்பதும், தி.மு.க. ஒன்றிய மாணவரணி துணைச் செயலர் என்பதும் தெரியவந்தது.

இவரது தாய், தந்தை இருவருக்கும் கண் தெரியாது. வாய் பேசவும் முடியாது. தனது குடும்ப சூழ்நிலை காரணமாக இந்து சமய அறநிலையத் துறையில் பணி வழங்க வேண்டும் என குறிப்பிட்டிருந்த மனுவை அளிக்க முயன்றமை தெரியவந்தது. இதையடுத்து, அவரது மனுவை விருகம்பாக்கம் பொலிஸார் பெற்றுக் கொண்டு அவரை அனுப்பி வைத்தனர்.

# கிரீன்லாந்தை கைப்பற்றுவதற்கு அமெரிக்காவுக்கு உரிமை இல்லை

## டென்மார்க் பிரதமர் தெரிவிப்பு

கிரீன்லாந்தை கைப்பற்றுவது தொடர்பான அச்சுறுத்தல்களை நிறுத்துங்கள் என்று டென்மார்க் பிரதமர் டொனால்ட் ட்ரம்பிடம் கூறியுள்ளார்.

மேலும் அமெரிக்கா கிரீன்லாந்தை கைப்பற்ற வேண்டிய அவசியம் பற்றி பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை என்றும் டென்மார்க் இராச்சியத்தில் உள்ள மூன்று நாடுகளில் எதையும் இணைக்க அமெரிக்காவிற்கு எந்த உரிமையும் இல்லை எனவும் டென் மார்க் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கிரீன்லாந்தின் இயற்கை வளங்கள் மற்றும் அதன் முக்கியமான புவியியல் இருப்பிடம் காரணமாக அமெரிக்கா அதன் மீது ஆர்வம் காட்டினாலும், அங்குள்ள மக்கள் அமெரிக்காவுடன் இணைவதை விரும்பவில்லை.



அமெரிக்காவின் இத்தகைய அழுத்தங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை பாதிக்கும் என டென்மார்க் எச்சரித்துள்ளது.

அதேசமயம், வெனிசுலாவில் அமெரிக்கா மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகள் மற்றும் அதன் ஆதிக்க மனப்பான்மை சர்வதேச அரசியலில் பெரும் பதற்றத்தை உருவாக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# நியூயோர்க் சிறையில் வெனிசுலா ஜனாதிபதி: போதைப்பொருள் கடத்தல் வழக்குப் பதிவு

வெனிசுலாவில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ நியூயோர்க் நகரில் சிறை வைக்கப்பட்டுள்ளார். அவர் மீது போதைப் பொருள் கடத்தியதாகவும், சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருந்ததாகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வெனிசுலா தலைநகர் கராகஸ் நகரின் மீது அமெரிக்க இராணுவத்தின் சிறப்புப் படையினர் நேற்று முன்தினம் அதிகாலையில் தாக்குதல் நடத்தினர். பின்னர் அந்நாட்டு அதிபர் நிக்கோலஸ் மதுரோ (வயது 63) மற்றும் அவரது மனைவியை அமெரிக்க படையினர் சிறைபிடித்தனர். பின்னர், அவர்களை போர்க் கப்பலில் அழைத்துச் சென்றனர்.

இந்நிலையில், இருவரும் அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டு, புரூக்ளினில் உள்ள பெருநகர தடுப்பு மையத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது போதைப் பொருள் பயங்கரவாதம், அமெரிக்காவுக்குள் டன் கணக்கில் கோகைனை இறக்குமதி செய்தது மற்றும் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருந்தது ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை எக்ஸ் தளத்தில் 61 விநாடிகள் ஓடும் ஒரு காணொலியை வெளியிட்டுள்ளது. அதில், மதுரோ அமெரிக்காவை வம்பிழுக்கும் காட்சிகளும், மதுரோவையும் அவரது மனைவி சிலியா புளோரஸையும் கைது செய்ய நடத்தப்பட்ட அதிரடி சோதனைக் காட்சிகளும் இடம்பெறுள்ளன.



அந்த காணொளியில், வெனிசுலா மீதான தாக்குதல்கள் குறித்து ட்ரம்ப் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன. அப்போது, அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட் ஹெக்சேத், "மதுரோ வம்பிழுத்தார், அதன் விளைவை அனுபவித்தார்" என்று குறிப்பிட்டார். அமெரிக்காவின் தாக்குதலில் பொது மக்கள் மற்றும் இராணுவ வீரர்கள் உட்பட 40 பேர் உயிரிழந்தனர் என வெனிசுலா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெனிசுலா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று ஐ.நா. பொதுச்செயலாளர் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்நிலையில், வெனிசுலா நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக பொறுப்பேற்குமாறு துணை அதிபர் டெல்சி ராட்ரிக்ஸுக்கு அந்நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ, புட்டபர்த்தி சாய்பாபாவின் தீவிர பக்தர் ஆவார். கடந்த 2005 ஆம் ஆண்டில் வெனிசுலாவின் வெளியுறவுத் துறை அமைச்சராக அவர் பதவி வகித்தார். அப்போது தனிப் பட்ட பயணமாக அவர் புட்டபர்த்திக்கு வருகை தந்து, சாய்பாபாவிடம் ஆசி பெற்றார்.

அமெரிக்க இராணுவத்தின் அதிநவீன 'டெல்டா போர்ஸ்' உள்ளிட்ட சிறப்புப் படைகள் பங்கேற்ற, டொனால்ட் ட்ரம்ப் தொடங்கிய "ஒபரேஷன் அப் சல்யூட் ரிசால்வ்" நடவடிக்கையின் மூலம் நிக்கோலஸ் மதுரோ பிடிபட்டார். வெனிசுலா ஜனாதிபதியை கைது செய்ய இந்த குழுவினருக்கு சுமார் 30 நிமிடங்கள் மட்டுமே ஆனதாகக் கூறப்படுகிறது.

மதுரோ, எஃகு மூலம் பலப்படுத்தப்பட்ட தனது பாதுகாப்பான அறைக்கு தப்பி ஓட முயன்றுள்ளார். அப்போது, வலுக்கட்டாயமாக இழுத்துச்செல்லப்பட்டு காவலில் எடுக்கப்பட்டார். ஓகஸ்ட் முதலே அமெரிக்க உளவுத் துறை அதிகாரிகள் மதுரோவின் ஒவ்வொரு அசைவையும் ரகசியமாகக் கண்காணித்துள்ளனர்.

அமெரிக்க முப்படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் டான் கெய்ன் நேற்று முன்தினம் கூறும்போது, "அவர் எப்படி நகர்ந்தார், எங்கே வசித்தார், எங்கே பயணம் செய்தார், என்ன சாப்பிட்டார், என்ன உடை அணிந்தார், அவருடைய செல்லப்பிராணிகள் என்ன என்பது வரை அனைத்தும் கண்காணிக்கப்பட்டன" என்றார்.

இதுகுறித்து ட்ரம்ப் கூறும்போது, "இந்தத் திட்டம் பல மாத கால துல்லியமான திட்டமிடல் மற்றும் ஒத்திகைகளை உள்ளடக்கியிருந்தது. குறிப்பாக, மதுரோ தங்கியிருந்த இல்லத்தைப் போன்றே ஒரு மாதிரி வீட்டை அமெரிக்கப் படைகள் உருவாக்கி ஒத்திகை பார்த்தனர். மதுரோவை பிடிக்கும் நடவடிக்கையை நேரலையில் பார்த்தேன்" என்றார்.

கனடா முரசு



திங்கட்கிழமை 05/01/2026

## ஈரான் அரசை எதிர்த்து கனடாவில் போராட்டம்

ஈரான் அரசுக்கு எதிர்ப்பை வெளியிட்டு கனடாவின் வான்கூவாரில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஈரானில் தொடரும் போராட்டங்களுக்கு ஆதரவு 02




# வெனிசுலா தொடர்பில் கனடா பயண எச்சரிக்கை

வெனிசுலாவில் பாதுகாப்பு அபாயங்கள் தீவிரமடைந்து வரும் நிலையில், அந்நாட்டுக்கு அனைத்து வகையான பயணங்களையும் தவிர்க்குமாறு கனடிய அரசு தனது பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெனிசுலாவின் தற்போதைய நிலைமை மிகவும் பதற்றமானது் எப்போது வேண்டுமானாலும் மோசமடையலாம். எல்லைகள் மற்றும் வான்வெளி குறுகிய நேரத்தில் மூடப்படக்கூடும் என்று ஒட்டாவா தெரிவித்துள்ளது.

இந்த எச்சரிக்கை, வெனிசூலா மீது அமெரிக்கா நடத்திய இராணுவ தாக்குதல்கள், தலைநகர் கராகஸில் பல இடங்களை இலக்காக்கிய நடவடிக்கைகள் மற்றும் ஜனாதிபதி நிக்கோலாஸ் மதுரோ, அவரது மனைவி கைது செய்யப்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ளது.

02






# அமெரிக்க அதிகாரிகளை தாக்கிய கனேடிய பெண் எல்லையில் கைது

அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற ஒரு கனேடிய பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

லிண்ட்சே என்ற கனேடிய பெண், கஞ்சா புகைக்கும் கருவி ஒன்றை வைத்திருந்ததால் அமெரிக்காவுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஆனால், அவர் இரு நாட்டவர்களும் சந்திக்கும் எல்லை வழியாக மீண்டும் அமெரிக்காவுக்குள் நுழைய முயன்றதாக அமெரிக்க எல்லை பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அப்போது லிண்ட்சேயை தாங்கள் கைது செய்ய முயன்றதாகவும், கைது செய்யப்படுவதை அவர் எதிர்த்தார் எனவும் பெண் அதிகாரி ஒருவரை முகத்தில் மிதித்தார் என்றும் அவர் மீது அமெரிக்க அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆனால், தான் தன் காதலரை சந் திக்க எல்லைக்குச் சென்றதாகவும், தன் நாயை அவரிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்வதற்காகவே தான் சென்றதாகவும், யாரையும் வேண்டுமென்றே தாக்கும் நோக்கம் தனக்கு இருக்கவில்லை என்றும் லிண்ட்சே கூறியுள்ளார் .






## ஈரான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கும் வகையில், ஈரான் - கனடியர்கள் சேர்ந்த இரண்டு வெவ்வேறு குழுக்கள் வான்கூவரில் போராட்டம் முன்னெடுத்துள்ளனர்.

1979 முதல் ஈரானை ஆட்சி செய்து வரும் இஸ்லாமிய குடியரசு ஆட்சியால் பாதிக்கப்பட்ட சாதாரண மக்களின் நிலையை வெளிச்சம் போடுவதே இவர்களின் நோக்கமாக இருந்தது என தெரிவிக்கப்படுகின்றது.

இப்போது நடைபெறும் போராட்டங்களுக்கு முக்கிய காரணமாக, ஈரானை ஆட்டிப்படைக்கும் பொருளாதார நெருக்கடி குறிப்பிடப்படுகிறது.

அமெரிக்க டாலருக்கு எதிராக ஈரான் நாணயத்தின் மதிப்பு கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், அத்தியாவசிய பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

முன்னதாக நடைபெற்ற ஈரான் போராட்டங்கள் வன்முறையால் ஒடுக்கப்பட்டுள்ள நிலையில், நாட்டின் 86 வயதான உச்ச தலைவர் ஆயத்துல்லா அலி காமெனெயி, “கலவரக்காரர்கள் தக்க இடத்தில் நிறுத்தப்பட வேண்டும்” என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் போராட்டக்காரர்களுக்கு கனடா அரசியல் தலைவர்கள் ஆதரவு வழங்க வேண்டும் என போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

## வெனிசுலா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெனிசூலாவிலுள்ள கனடா தூதரகம் 2019 முதல் செயல்படவில்லை. அங்கு உள்ள கனடியர்களுக்கு தூதரக உதவி வழங்கும் எங்கள் திறன் மிகக் குறைந்துள்ளது.

தொலைநிலையிலேயே சேவைகள் வழங்கப்படுகின்றன என பயண அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எச்சரிக்கையை மீறி வெனிசுலாவுக்கு பயணம் செய்வோர், பாதுகாப்பான இடத்தில் தங்க தயாராக இருக்க வேண்டும், போதிய உணவு, குடிநீர் கையிருப்பு வைத்திருக்க வேண்டும், உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவசர தூதரக உதவி தேவைப்படுவோர், கனடாவிலிருந்து: 1-800-387-3124, வெளிநாட்டிலிருந்து: 1-613-996-8885, மின்னஞ்சல்: sos@international.gc.ca என்ற முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெனிசுலா நிலவரத்தை கருத்தில் கொண்டு, எயார் கனடா நிறுவனம் அபராதம் இன்றி விமான பயணத் திகதிகளை மாற்ற அனுமதிக்கும் சிறப்பு கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.



# கடும் பனிப்பொழிவு தொடர்பில் டொரோண்டோவில் எச்சரிக்கை

கனடாவின் டொரோண்டோ நகரமும் அதனைச் சுற்றியுள்ள பல பகுதிகளும் திங்கள்கிழமை காலை வரை 10 சென்ரி மீற்றர் வரை பனிப்பொழிவை எதிர்கொள்ளக்கூடும் என கனடாவின் தேசிய வானிலை நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பர்லிங்டன், ஓக்வில்லே, காலெடன், டொராண்டோ நகரம், ஹால்டன் ஹில்ஸ்-மில்டன், மிசிசாகா-பிராம்ப்டன், நியூமார்க்கெட்-ஜார்ஜினா-வடக்கு யார்க் பிராந்தியம், பிக்கரிங்-ஓஷாவா-தெற்கு டர்ஹாம் பிராந்தியம், உக்ஸ்பிரிட்ஜ்-பீவர்டன்-வடக்கு டர்ஹாம் பிராந்தியம் மற்றும் வாகன்-ரிச்மண்ட்ஹில்-மார்க்கம் உள்ளிட்ட பகுதிகளுக்கு மஞ்சள் நிற பனிப்பொழிவு எச்சரிக்கையை வெளியிட்டது.

அதிக பனிப்பொழிவு நேரங்களில் பார்வைத் தெளிவு குறையக்கூடும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த பனிப்பொழிவு திங்கள்கிழமை அதிகாலை தொடங்கி பிற்பகல் வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பனியின் அளவு மிக அதிகமாக இல்லாவிட்டாலும், அதன் நேரம் சிக்கலை ஏற்படுத்தக்கூடும். விடுமுறை காலம் முடிவடைந்துள்ளதால், போக்குவரத்து வழமை நிலைக்கு திரும்பியுள்ள நிலையில், போக்குவரத்துக்கு இந்த பனிப்பொழிவு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கையில் தெரிவித்துள்ளது.

போக்குவரத்து சவாலானதாக இருக்கலாம். பனி தேங்குவதால் வீதிகள் மற்றும் நடைபாதைகள் வழுக்கலாக இருக்கும். காலை நேர போக்குவரத்தில் குறிப்பிடத்தக்க பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால், அந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் சாலையில் செல்ல கூடுதல் நேரம் ஒதுக்கி பயணம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

















# பஸ்ஸூக்குள் நடந்த துப்பாக்கிச் சூடு; டொரோண்டோவில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் டொரோண்டோ நகரில் உள்ள யோர்க்டேல் GO பஸ் நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என டொரோண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யோர்க்டேல் வீதி மற்றும் அலன் எக்ஸ்பிரஸ்வேயை நோக்கிச் செல்லும் ரேம்ப் அருகிலுள்ள பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பஸ்ஸூக்குள் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக வந்த தகவலையடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

சம்பவ இடத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஆண் ஒருவரை பொலிஸார் மீட்டுள்ளனர். மருத்துவ அவசர சேவையினர் சம்பவ இடத்தில் ஒருவரை பரிசோதித்துள்ளனர். ஆனால் மருத்துவமனைக்கு எவரையும் கொண்டு செல்லவில்லை. இதனால் அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது.

இதேவேளை இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் குறித்த விவரங்களை வெளியிட்டுள்ளனர். சந்தேகநபர் சுமார் 20 வயதான ஆண் என்றும் சுமார் 5 அடி 8 அங்குல உயரம் கொண்டவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதுவரை எந்தக் கைது நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






